# சிற்றிலக்கியம் - சிறுபாணாற்றுப்படை

- முன்னுரை
- சிறுபாணாற்றுபடையின் வேனிற்காலம்
- மதுரையின் சிறப்பு
- வஞ்சியின் சிறப்பு
- கடையெழு வள்ளல்களின் சிறப்பு
- நல்லியக்கோடனின் சிறப்பு
- முடிவுரை

# முன்னுரை

சிறிய யாழை வாசிப்போர் சிறுபாணர் ஆவர். இது 269 அடிகளையுடையது. இதில் இசைப்பாணர். யாழ்ப்பாணர். பிச்சையேற்றும் பிழைக்கும் மண்டைப்பாணர் என பாணர் மூவராவர். சிறுபாணரை ஆற்றுப்படுத்துவது சிறுபாணாற்றுப்படை ஆகும். இது அடி அளவில் குறைந்த நூல் இந்நூலாசிரியர். நுல்லூர் நத்தத்தனார் ஆவர். இதில் சேர. சோழ பாண்டிய நாட்டுப் பெருமையையும். பேகன். காரி. பாரி. ஆய். ஆதியமான். நள்ளி. ஓரி என கடையெழு வள்ளல் அருட்செயலையும் கூறுவது பற்றியும் நாட்டுவளத்தின் சிறப்பையும் கூறும் வகையுழ் அமைவதை காண்போம்...

# வேனிற்காலம்.

- மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
- அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போலச்
- பாலை நின்ற பாலை நெடுவழிச்
- சுரன் முதல் மரா அத்த வரிநிழல் அசைஇ
- மூங்கில் தோளையுடைய நிலமடந்தையின் மணிமலையாகிய மலையின் மேல் கிடந்தசையும் முத்துமாலை போன்றும் ஓடும் ஆறகலாக செம்மைப் பொருந்தியதாக அந்நாட்டு கூந்தல் நறுமணம் உள்ளது. ஞாயிற்றினது கதிர்கள் நாட்காலத்திலேயே வெப்பத்தை மிகச் செலுத்துகையால் பாலைத்தனமை நிலைப்பெற்ற பாலையாகிய நீண்ட சுரண் கொண்ட கடம்ப மரத்தின் நிழலில் அழகைக் கொண்டு கூந்தலையும் ஆண் மயில் தோகை என்பது காணப்படுகிறது..

# மதுரையின் சிறப்பு

- “ செய்புங் கண்ணி செவிமுதல் திருத்தி
- நோன்பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த
- மகாஅர் அன்ன மந்தி மடவோர்
- நகாஅர் அன்ன நளிநீர் முத்தம்
- வணிகர் உப்புகளை வலிமையுடைய எருமை வண்டியில் கொண்டு சென்றனர். அவ்வழியில் குரங்குகள் பின் சென்றன. அவ்வணிகப் பெண்கள் முத்துக்களை மறைத்து வைத்தனர். ஆவர்கள் தங்கும் இடங்களில் புதல்வரும் விளையாடுகின்றனர். இவ்வருணனை உப்பையும் முத்தையும் மதுரையைப் பற்றிக் கூறும் போது தமிழ் நிலை பெற்ற பழமையான மகிழ்ச்சி கொண்ட நாடாக பாணடிய நாடு உள்ளது.

# வஞ்சி நாட்டின் சிறப்பு

 கொழுமீன் குறைய ஒதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை
வடபுல இமயத்து வாங்குவில் பொறித்த
எழுவுறழ் திணிதோள் இயல்தேர்க குட்டுவன..

கொழுமீன்கள் துணிப்படும்படி இதழை உடைய செங்கழுநீர் மலரை மேய்ந்த எருமை பசிய படர்ந்த பலாமரத்தினது நிழலை உடைய மேற்குதிசை சேரநாட்டின் அரசர் குடிபிறந்தவனும் மரத்தை ஒத்த வில் ஏய்ந்திய இலச்சினை உடைய குட்ட நாட்டு தலைவனுமாகிய மன்னன் இக்கால பரிசிலர்க்கு சிறிதாயிருக்கும்.

# ஏழு வள்ளலின் சிறப்பு

- பேகனின் சிறப்பு

□□ வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்கும் கலிங்கம் நல்கிள
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகன் கருப்பன□

பரிசில் பெறும் பொருள் சிறியதாகவும் தகுந்த பரிசு பெறும் இடம் மழைபொய்யாது பெய்தலால் வளமிக்க மலைப்பக்கத்தின் காட்டில் மயில் அகவியதைக் கேட்டு குளிரால் வருந்தியப்பேரருள். தன் போர்வையை மயிலுக்கு வழங்கினான். ஆவியர் குடியில் தோன்றிய பேகன் ஆவான்..

.

குளிரால் வருந்திய மயிலுக்கு போர்வை அழித்த பேகன் வள்ளல்



# பாரியின் கொடை சிறப்பு

- “ நறுவி உறைக்கும் நாக நெடுவழிச்
- சிறுவி முல்லைக்கு பெருந்தேர் நல்கிய
- பிறங்குவெள ளருவி வீழ்ஞ் சாரல்
- மறம்பிற கோமான் பாரியும் கறங்குமணி

- சுரும்புகள் உண்ணும் தேன் வழங்கும் சுர புன்னை மிக்க நெடிய வழியின் கண்ணே தன் தேரைத தடுத்த முல்லைக்கொடி அதற்கு பெரிய தேரை அளித்தவன் பறம்புமலை அரசன் பாரி ஆவான்

# முல்லைக்கு தேர்க்கொடுத்த பாரி வேந்தன்



# காரியின் சிறப்புகள்..

வாலுவைப் புரவியோடு வையகம் மருள.
வீர நன்மொழி இவைலர்க்கு ஈந்த
அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
கழல்தொடித் தடக்கைக் காரியும் நிழல்.

காரி என்பவர் குதிரையை வைத்திருந்தவர். தனது நாட்டில் அருள் மொழியையும் ஏனையர் வியக்குமாறு இரவலாகவே குதிரையை கொடுத்தவராவர்.

# காரியின் குதிரை வளம்



# ஆய்

□□நீலநாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வதற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவம் தாங்கிய சாந்துபலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயம் மால்வரைக்□

நீலகற்களை உடைய பாம்பின் தோளை ஆடையாகக் கொண்டவன். இறைவனுக்கு வழங்கியவன். வில் ஏந்தியவன். இனிமையான மொழியை பேசுபவனாக விளங்குகிறான்.

# அதியமானின் சிறப்புகள்

- அமிழ்த்துவளை தீங்கனி ஔவைக்கு ஈந்த
- உரவுச்சின்னம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
- அரவக்கடல் தானை அதிகனும் கரவாது
- நாட்டோர் உவப்ப நடைப்பரி காரம்..

- பெரிய மலைச்சாரலும். நறுமணம் மிகுந்த மலை சாரலில் அழகுபெற்ற நெல்லிக்கனி மரத்தில் அமிழ்தத் தன்மையுடைய கனியை அதியமான் ஔவைக்கு கொடுத்தவனும் அறிய வலிமை உடையவனும் போர் செய்வதில் வல்லவனுமாக பெரிய மலை நாட்டை உடைய அதியமான் ஆவான்.

# அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்



# நள்ளி

- துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
- நளிமலை நாடன் நள்ளியும் நளிசினை
- நறும்போது கஞ்சிய நாகுமுதிர் நாகத்து
- குறும்பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த

- தன்னை நாடி வருபவர்களுக்கு பொன்னையும் பொருளையும் கொடுத்து இல்வாழ்க்கைக்கு தேவையானதை வாரி வழங்குபவனாக தொழில் வள்ளலவனாக நள்ளி ஈன்ற வள்ளலவன்□

தன்னை நாடி வருபவர்க்கு பொன்னையும் பொருளையும் வாரி வழங்கும் வகையில் நள்ளி வேந்தன்□.



# ஓரி

- □□ காரிக்குதிரைக் காரியொடு மலைந்த
- ஓரிக்குதிரை ஓரியும் எனவாங்கு
- எழுசமங் கடந்த எழுஉறழ் திணிதோள்
- ஏழவர் பூண்ட ஈகைச் செந்நுகம்..

நிறைய மாங்கனி பூக்கள் இருக்கும். நாட்டினை தன்னுடைய நாட்டின் சிறிய பகுதியை ஆட்சிச்செய்தவன். ஆடி. பாடி வரக்கூடிய பகைவரான கூத்தர்களுக்கு தன் நாட்டினையே கொடுத்தவனாகவும் விளங்குகிறான்.



# நல்லியக்கோடனின் சிறப்பு

- புகழ்ந்து கூறப்படும் போர்களில் சிறப்பு பொருந்தியவனாகவும் போர் கடந்த தோளையுடைய வள்ளல் எழுவரும் மேற்கொண்டு நடத்திய கொடையாகிய பாரத்தை உலகம் விளங்கும் நல்லியக்கோடனின் சிறப்பு என்பது அமைந்து வருகிறது.

# முடிவுரை

- இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்பவர் தொகை நூல்களில் இவர் பரந்த அறிவுடையர் என்பதும் பல இடங்களையும் சிறப்பாகச் சுற்றிலும் பார்த்தவர் என்பதும் இயற்கையழகில் திளைத்து மகிழ்ந்தவர் என்பதும் நிறைந்த வாழ்க்கை அனுபவம் பெற்ற கலைஞர் என்பவராவர். என்பதையும் கொண்டு சிறுபாணாற்றுப்படையில் வழியே கடையெழு வள்ளல்களின் சிறப்பு அம்சமாகக் காணப்பட்டு வருவதை இதன் மூலம் அறியப்படுகிறது.